**செய்தி வெளியீடு எண்: 291** **நாள்: 16.05.2012**

# <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (16.5.2012) தலைமைச் செயலகத்தில், தமிழகத்தின் முதலமைச்சராக மூன்றாம் முறையாக பொறுப்பேற்று ஓராண்டு நிறைவடைந்ததையொட்டி, செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உரைத்தொகுப்பு உள்ளிட்ட சிறப்பு வெளியீடுகள், ஓராண்டுச் சாதனைகளை விளக்கும் குறுந்தகடுகள் ஆகியவற்றை வெளியிட்டார்கள்.

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சிறப்புமிகு உரை – 3 தொகுப்புகள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்), 'புரட்சித்தலைவி அம்மாவின் அமுதமொழிகள்' தமிழக அரசின் சாதனைகளை விளக்கும் 'நூறாண்டு பேசும் ஓராண்டுச் சாதனை' என்ற குறும்படம் மற்றும் குறும்பாடல் அடங்கிய குறுந்தகடுகள் 'முத்திரை பதிக்கும் சித்திரை' என்ற தமிழ்ப்புத்தாண்டு சிறப்பு மலர் (தமிழ்), மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் முக்கிய நிகழ்வுகள் அடங்கிய ஆங்கில எழிலேடு (Coffee Table Book) மற்றும் ஓராண்டுச் சாதனைகளை விளக்கும் ஒட்டு வில்லைகள் (Stickers) ஆகியவற்றை இன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வெளியிட்டார்கள். இதன் முதல் பிரதியை மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் திரு. தேபேந்திரநாத் சாரங்கி, இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறைச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம், இ.ஆ.ப. அவர்கள் நன்றி கூறினார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
நாள்: 16.5.2012